1984 ஏப்ரல் 10]

சேலம் உருக்காலைக்கு அருகாமையில் நவீன நகரியம் அமைக்கும் திட்டம்.

416—(*வினா எண். 20500) திரு. சி. கணேசன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் உருக்காலைக்கு அருகாமையில் நவீன நகரியம் அமைக்கும் பணி முடிவு பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) சேலம் உருக்காலையின் அருகாமையிலுள்ள நகரியமான மோகன் நகர் 750 குடியிருப்புகளைக் கொண்டுள்ளது. இந்தநகரியம் நான்கு வகைப்பட்ட குடியிருப்புகளுடன் தேவையான வசதிகளோடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ எல்லா வீடுகளும் ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

செய்யார் வட்டத்தைத் தொழில்துறையில் அபிவிருத்தி செய்யும் திட்டம்.

417—(*வினா எண். 21614) திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் செய்யார் வட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கி இருப்பதால், மேற்படி பகுதியை அபிவிருத்தி செய்ய அரசு திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

(ஆ) விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிவிட்ட செய்யார் வட்டத்தின் துரித வளர்ச்சிக்கு உதவுவதற்காக மாநில அரசு இப்பகுதியை பின்தங்கிய பகுதியாக 1979 டிசம்பரில் அறிவித்தது. இதனால் இங்கு துவங்கப்படும் சிறு தொழில்களுக்கு மாநில அரசே தன் நிதியிலிருந்து மானியம் வழங்குகிறது. இந்த மானியம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையின் நிரந்தர முதலீட்டில் 15 விழுக்காடு ஆகும். மேலும் தொழிற்சாலைக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு வங்கிகள் நிதிவசதி செய்கின்றன.